
**ஏப்ரல் – 10**

# TNPSC துளிகள்

- பொது மக்களின் பாதுகாப்பு மற்றும் அதற்கான மீட்பு நடவடிக்கைகளில் முதல் நிலை நடவடிக்கை மேற்கொள்ளும் பிரிவிற்கு உதவுவதற்காக என சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது ஒரு கம்பிவட இணைப்பு இல்லாத நிகழ்நேர உட் கட்டமைப்பு வரைபடமாக்கல் தொழில்நுட்பத்தினை உருவாக்கியுள்ளது.
- 2025–2027 ஆம் காலக் கட்டத்திற்கான சர்வதேசக் கணக்கியல் மற்றும் அறிக்கையிடல் தரநிலைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் அரசுகளுக்கிடையேயான நிபுணர் குழுவில் (ISAR) இந்தியாவும் ஓர் அங்கமாக நியமிக்கப்பட்டுள்ளது.
- வங்காளதேச அரசானது, வங்காள விரிகுடா பல்துறைத் தொழில்நுட்ப மற்றும் அதன் பொருளாதார ஒத்துழைப்புக்கான முன்னெடுப்பு (BIMSTEC) என்ற பிராந்தியக் குழுவின் தலைமைப் பொறுப்பிற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குப் பொறுப்பேற்றுள்ளது.
- இந்தியக் கடற்படையானது, இந்தியப் பெருங்கடல் கப்பல் (IOS) SAGAR முன்னெடுப்பின் ஒரு பகுதியாக INS சுனைனா எனப்படும் கடல்சார் ரோந்து கப்பலை அறிமுகப்படுத்தி உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மீனவர்களுக்கான திட்டங்கள் 2025




- மன்னார் வளைகுடாவைச் சுற்றியுள்ள சில மாவட்டங்களில் உள்ள மீனவர்களின் நலனுக்காக சுமார் 216.73 கோடி ரூபாய் மதிப்புள்ள சிறப்பு வாழ்வாதாரத் திட்டங்களை தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- தங்கச்சிமடம், பாம்பன் மற்றும் குண்டுகால் ஆகிய இடங்களில் 360 கோடி ரூபாய்கள் செலவில் ஆழ்கடல் மீன்பிடித் துறைமுகங்களை உருவாக்குவதாகவும் அவர் அறிவித்து உள்ளார்.

- இந்தத் திட்டத்தில் பதப்படுத்துதல் மற்றும் விற்பனை ஆகியவை உட்பட மீன்பிடிச் சமூகத்தினர், கடல் மிதவைக் கூண்டு மீன் மற்றும் நண்டு வளர்ப்பில் ஈடுபட உதவும் வகையில் உபகரணங்கள் மற்றும் ஆதரவுச் சேவைகள் வழங்கப்படும்.

### தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள புதியத் திட்டங்கள்

- தமிழ்நாட்டில் 8300 கோடி ரூபாய் மதிப்புள்ள இரயில் மற்றும் சாலைத் திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டியுள்ளார்.
- இராமேஸ்வரம் மற்றும் தாம்பரம் (சென்னை) ஆகியவற்றுக்கிடையேயான ஒரு புதிய இரயில் சேவையையும் அவர் தொடங்கி வைத்தார்.
- NH-40, NH-332, NH-32 மற்றும் NH-36 ஆகிய பல்வேறு புதிய தேசிய நெடுஞ்சாலை (NH) திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.





## தேசியச் செய்திகள்

### இந்தியாவில் பெண்கள் மற்றும் ஆண்கள் 2024

- இந்தியாவில் பெண்கள் மற்றும் ஆண்களின் நிலை 2024: தேர்ந்தெடுக்கப்பட்ட சில குறிகாட்டிகள் மற்றும் தரவுகள் என்ற அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இது இந்தியாவில் பல்வேறு துறைகளில் பாலினம் தொடர்பான குறிகாட்டிகளின் மீது ஒரு விரிவான கண்ணோட்டத்தை வழங்குகிறது.
- 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினருக்கான ஒரு வழக்கமான நிலையிலான தொழிலாளர் வளப் பங்கேற்பு விகிதம் ஆனது (LPFR) சுமார் 49.8 சதவீதத்திலிருந்து (2017-18) 60.1% (2023-24) ஆக அதிகரித்துள்ளது.
- அனைத்து வங்கிக் கணக்குகளிலும் 39.2% கணக்குகளைப் பெண்கள் வைத்துள்ளனர் மேலும் மொத்த வைப்புத்தொகையில் அவர்கள்39.7% பங்கினை அளிக்கிறார்கள்.
- கிராமப்புறங்களில் உள்ள வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்களில் 42.2% பங்குடன் பெண்களின் பங்களிப்பு ஆனது கிராமப்புறங்களில் மிக அதிகமாக உள்ளது.
- ஆண்களின் DEMAT கணக்குகளின் ஒரு எண்ணிக்கையானது 2021 ஆம் ஆண்டில் சுமார் 26.59 மில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் 115.31 மில்லியனாக உயர்ந்துள்ளது.
- அதே காலக் கட்டத்தில் பெண்களின் DEMAT கணக்குகள் 6.67 மில்லியனில் இருந்து 27.71

மில்லியனாக அதிகரித்துள்ளது.

- 1952 ஆம் ஆண்டில் 173.2 மில்லியனாக இருந்த மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை ஆனது, 2024 ஆம் ஆண்டில் 978 மில்லியனாக அதிகரித்தது.
- 2019 ஆம் ஆண்டில் 67.2% ஆகிய இருந்த பெண் வாக்காளர் எண்ணிக்கையானது, 2024 ஆம் ஆண்டில் 65.8% ஆக சற்று குறைந்து பல ஆண்டுகளாக மாறுபட்டு வருகிறது.




## வர்ஷா திட்டம்




- 2026 ஆம் ஆண்டிற்குள் கடலோர ஆந்திரப் பிரதேசத்தில் அணுசக்தியில் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பல்கள் மற்றும் போர்க் கப்பல்களுக்கான புதியக் கடற்படைத் தளத்தை இந்தியா நிறுவ உள்ளது.
- இந்தக் கடற்படை தளம் ஆனது வர்ஷா திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட உள்ளது.
- இந்தப் புதியதொரு தளம் ஆனது இராம்பில்லி என்ற கடலோரக் கிராமத்திற்கு அருகில் அமைக்கப்பட உள்ளது.
- சீனாவின் ஹைனான் தீவில் விரிவான அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் தளத்தைப் போலவே, இராம்பில்லியில் உள்ள கடல் நீரின் ஆழமும் செயற்கைக் கோள்களின் கண்காணிப்பு இல்லாமல் நீர்மூழ்கிக் கப்பல்கள் தளத்திற்குள் நுழைந்து

வெளியேற உதவும் வகையில் உள்ளது.

❖ கிழக்கில் மேற்கொள்ளப்படும் வர்ஷா திட்டத்தைப் போலவே, கர்நாடகாவில் உள்ள கார்வார் தளம் சீபேர்ட் திட்டத்தின் கீழ் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளது.


## இந்தியாவில் வயிற்றுப்போக்கு நோய் பாதிப்பு

❖ உலக சுகாதார அமைப்பின் படி, வயிற்றுப் போக்கு நோய் ஆனது 1 முதல் 59 மாத வயதுடைய குழந்தைகளிடையேயான உயிரிழப்பிற்கான மூன்றாவது முக்கியக் காரணமாக உள்ளது.

❖ இது உலகளவில் 4,43,832 ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் உயிரிழப்புகளுக்கும், முதல் 9 வயதுடைய குழந்தைகளில் கூடுதலாக சுமார் 50,851 உயிரிழப்புகளுக்கும் வழி வகுத்தது.

❖ ஒவ்வோர் ஆண்டும் 1.7 பில்லியன் குழந்தைப் பருவப் பாதிப்புகளுடன், இந்தியா இந்தப் பாதிப்பு எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்கப் பங்கை வகிக்கிறது.

❖ பாதுகாப்பான குடிநீர் இல்லாத நிலையிலான மோசமான சுகாதாரப் பிரச்சினைகள் சுமார் 780 மில்லியன் மக்களைப் பாதிக்கின்றன மற்றும் சுமார் 2.5 பில்லியன் மக்கள் மேம்பட்ட சுகாதாரம் இல்லாத நிலையில் உள்ளனர்.





## SAFE Agromet திட்டம்

❖ இஸ்ரோவின் தலைமையிலான SAFE Agromet திட்டம் ஆனது, மாதாந்திர நெல் சாகுபடி கண்ணோட்டச் செயல்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்காக விண்வெளி அடிப்படையிலான வேளாண் வானிலைத் தகவல்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இது JAXA மற்றும் GISTDA ஆகியவற்றுடன் இணைந்து சரிபார்க்கப்பட்ட விண்வெளி அடிப்படையிலான வேளாண் வானிலை (Agromet) தகவல்களை வழங்கியது.


❖ சுற்றுச்சூழலுக்கான பல்வேறு வகை விண்வெளிப் பயன்பாடுகள் / செயல்பாடுகள் (SAFE) முன்னெடுப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டச் செயல்பாடுகளானது 2020 முதல் 2024 ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்டது.

- இந்தத் திட்டத்திற்காக ஆசியான் உணவுப் பாதுகாப்பு தகவல் அமைப்பிலிருந்து (AFSIS) இஸ்ரோ நிறுவனம் பாராட்டினைப் பெற்றுள்ளது.




## சர்வதேசச் செய்திகள்

### பாகு முதல் பெலெம் வரை – செயல்திட்டம்




- 11வது பிரிக்ஸ் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் கூட்டம் ஆனது பிரேசிலின் பிரேசிலியா என்ற நகரில் நடைபெற்றது.
- 'பாகு முதல் பெலெம் வரை எனும் ஒரு செயல்திட்டத்தில்' பிரிக்ஸ் நாடுகள் ஒன்றுபட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியது.
- உலக மக்கள்தொகையில் 47% மற்றும் உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (PPP) 36% பங்கினை பிரிக்ஸ் நாடுகள் கொண்டுள்ளன.
- தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்புகளுக்கு (NDCs) ஆதரவளிப்பதற்காக பருவ நிலை நிதியில் 1.3 டிரில்லியன் டாலர் நிதியினைப் பெறுவதை ஒரு நோக்கமாகக் கொண்ட பாகு முதல் பெலெம் வரை - செயல் திட்டத்தில் முக்கியக் கவனம் செலுத்தப் பட்டது.

- பருவநிலை நிதிக்கான புதியக் கூட்டு அளவீட்டு இலக்கின் கீழ் 2035 ஆம் ஆண்டிற்குள் திரட்டப்பட வேண்டியதாக முன்மொழியப்பட்ட வருடாந்திர 300 பில்லியன் டாலர்கள் இலக்கானது 1.3 டிரில்லியன் டாலர் என்ற இலக்கை விட கணிசமாகக் குறைவாகும்.

## கரகாண்டா பிராந்தியம் – அருமண் தனிமம்




- கஜகஸ்தான் நாடானது, கரகாண்டா பிராந்தியத்தில் இதுவரையில் கண்டறியப்படாத அதன் மிகப்பெரிய அருமண் தனிம இருப்பினைக் கண்டுபிடித்துள்ளது.
- முதற்கட்ட மதிப்பீடுகள் ஆனது, இர்கிஸ் பகுதியில் மட்டும் சுமார் 800,000 டன் அருமண் உலோகங்கள் இருப்பதாகக் கூறுகின்றன.
- பெரிய ஜானா கஜகஸ்தான் கனிம இருப்புப் பகுதியில் சுமார் 300 மீட்டர் ஆழத்தில் 20 மில்லியன் டன்களுக்கும் அதிகமான அளவில் அருமண் உலோகங்கள் இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கனிம இருப்பில் சீரியம், லாந்தனம், நியோடைமியம் மற்றும் இட்ரியம் போன்ற மதிப்புமிக்கக் கனிமக் கூறுகள் உள்ளன.

## சிறிய தீவுகள் மீதான அமெரிக்காவின் வரி





- அமெரிக்க நாட்டின் அதிபர் டொனால்ட் டிரம்ப், மிகவும் சிறிய ஆப்பிரிக்க அரசான லெசோதோவிலிருந்து வரும் பொருட்கள் மீது மிக அதிகபட்சமாக 50% வரியை விதித்து உள்ளார்.

- ஆஸ்திரேலியாவின் மற்றப் பகுதிகளைப் போலவே, ஹியர்ட் மற்றும் மெக்டொனால்ட் தீவுகளும், கோகோஸ் (கீலிங்) தீவுகளும் கிறிஸ்துமஸ் தீவும் தற்போது 10% வரிக்கு உட்படும்.
- சுமார் 2,200 என்ற அளவில் மக்கள் தொகையைக் கொண்டுள்ள ஆஸ்திரேலியப் பகுதிப் பிரதேசமான நோர்போக் தீவில் 29% வரி விதிக்கப்பட்டது.
- ஹியர்ட் தீவு ஆனது மிகத் தரிசாக, பனிக்கட்டியால் சூழ்ந்த மற்றும் முற்றிலும் மக்கள் வசிக்காததாக இருந்தாலும், ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய மற்றும் செயலில் உள்ள எரிமலையான பிக் பென் அமைந்துள்ள, பெரும்பாலும் பனிப்பாறைகளால் சூழப் பட்டு உள்ளது.
- இந்தத் தீவுகளானது யுனெஸ்கோ அமைப்பினால் வெளிப்புற தாவரங்கள், விலங்குகள் அல்லது மனித தாக்கம் இல்லாத சுற்றுச்சூழல் அமைப்பின் அரிய உதாரணமாக உலக பாரம்பரியப் பட்டியலில் ஒன்றாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## ஒரு மாநிலம், ஒரு RRB




- 2025 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் வகையில் பல பிராந்தியக் கிராமப்புற வங்கிகள் (RRBs) ஒன்றிணைக்கப்பட உள்ளதாக மத்திய அரசு அறிவித்து உள்ளது.
- இந்த RRB வங்கிகள் ஆனது அவற்றின் பல சொத்துக்கள், அதிகாரங்கள், உரிமைகள், பொறுப்புகள் மற்றும் கடமைகளைப் பெற்று ஒரே நிறுவனமாக ஒன்றிணைக்கப்படும்.
- மிகப்பெரியப் பொதுத்துறை கடன் வழங்குநரான பாரத் ஸ்டேட் வங்கியானது (SBI), அதிக எண்ணிக்கையிலான RRB வங்கிகளுக்கு (14) நிதியுதவி வழங்குகிறது, அதைத்

தொடர்ந்து பஞ்சாப் தேசிய வங்கி (9) மற்றும் கனரா வங்கி (4) ஆகியவற்றிற்கு நிதி அளிக்கிறது.

- மாநிலங்களில், ஆந்திரப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் தலா மூன்று RRB வங்கிகள் உள்ளன.
- RRB வங்கிகள் ஆனது 2024 ஆம் நிதியாண்டில் 7,571 கோடி ரூபாய் என்ற மிக அதிகபட்ச ஒருங்கிணைந்த நிகர இலாபத்தைப் பதிவு செய்துள்ளன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவில் நீண்ட மூக்கு கொண்ட கொடி பாம்பு




- உத்தரப் பிரதேசத்தின் லக்கிம்பூர் கெரியில் உள்ள துத்வா புலிகள் வளங்காப்பகத்தில் ஓர் அரிய நீண்ட மூக்கு கொண்ட கொடி பாம்பு (அஹேதுல்லா லாங்கிரோஸ்ட்ரிஸ்) மீண்டும் கண்டறியப்பட்டுள்ளது.
- இவ்வகை பாம்பு இம்மாநிலத்தில் ஆவணப்படுத்தப்படுவது முதல் முறையாகும் என்ற ஒரு நிலையில் இது இந்தியாவில் பதிவு செய்யப்படுவது இரண்டாவது முறையாகும்.
- முன்னதாக, அஹேதுல்லா லாங்கிரோஸ்ட்ரிஸ் என்பது கடந்த ஆண்டு பீகார் மற்றும் ஒடிசாவில் ஒரு முறை மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இந்த இனம் பொதுவாக தென்கிழக்கு ஆசியாவில் காணப்படுகிறது.


# மாநிலச் செய்திகள்

## மேற்கு வங்காளத்திற்கு 7 புவிசார் குறியீடுகள்

- மேற்கு வங்காள மாநில அரசானது, அதன் ஏழு மாநிலத் தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடுகளைப் பெற்றுள்ளது என்ற ஒரு நிலையில் அவற்றில் அதன் ஒரு அடையாளச் சின்னமான 'நோலன் குரேர் சந்தேஷ்' மற்றும் பருய்ப்பூர் கொய்யா ஆகியவையும் அடங்கும்.
- இதன் மற்ற ஐந்து பொருட்கள், கமர்ப்புக்கூரின் வெள்ளை 'போண்டே' இனிப்பு வகை, முர்ஷிதாபாத்தின் 'சானாபோரா' இனிப்பு வகை, பிஷ்ணுபூரின் 'மோதிச்சூர் லட்டு',

ராதுனிபகல் அரிசி மற்றும் மால்டாவின் நிஸ்டாரி பட்டு நூல் ஆகியனவாகும்.

- அம்மாநில அரசானது, கைவினைப்பொருட்கள், ஜவுளி, தேநீர், உணவுப் பொருட்கள் மற்றும் கலை பொருட்கள் உட்பட சுமார் 26 இதரப் பொருட்களுக்கு இதுவரை புவிசார் குறியீடுகளைப் பெற்றுள்ளது.




**2025 ஆம் ஆண்டில் AFSPA நீட்டிப்பு**




- மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) ஆனது, மணிப்பூர், அருணாச்சலப் பிரதேசம்

மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் மேலும் ஆறு மாதங்களுக்கு ஆயுதப்படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தினை நீட்டித்துள்ளது.

- அம்மாநிலத்தின் ஐந்து பள்ளத்தாக்கு மாவட்டங்களிலுள்ள 13 காவல் நிலையங்களின் அதிகார வரம்பைத் தவிர, இன வன்முறையால் பாதிக்கப்பட்ட மணிப்பூர் மாநிலம் முழுவதும் AFSPA நீட்டிக்கப்பட்டுள்ளது.
- AFSPA சட்டமானது 1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப் பட்டது.
- 1981 ஆம் ஆண்டு முதல் மணிப்பூர் மாநிலத்தில் AFSPA சட்டம் அமலுக்கு வந்தது.
- மாநில மற்றும் மத்திய அரசுகள் ஆகிய இரண்டும் சில பகுதிகளை "இடையூறுகளுக்கு உட்பட்டவை" என்று அறிவித்து ஆயுதப் படைகளுக்கு AFSPA சட்டத்தின் கீழ் அதிகாரம் வழங்கி, அறிவிப்புகளை வெளியிடலாம்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேசக் கண்ணி வெடிகள் குறித்த விழிப்புணர்வுத் தினம் - ஏப்ரல் 04




- கண்ணி வெடிகள், போரில் எஞ்சிய வெடி பொருட்கள் மற்றும் நன்கு மேம்படுத்தப்பட்ட வெடிக்கும் சாதனங்கள், குறிப்பாக ஆயுத மோதல் போன்ற பல்வேறு சூழ்நிலைகளில், தொடர்ந்து உயிரிழப்பு மற்றும் காயத்தை ஏற்படுத்துகின்றன.
- சராசரியாக, ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு நபர் இந்த வெடிக்கும் சாதனத்தால் கொல்லப்படுகிறார் அல்லது காயமடைகிறார்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Safe Futures Start Here" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## முதல் பண்டைய கிரேக்க அரங்கம்

- கிரேக்கத்தின் லெஃப்கடாவில் உள்ள முழு அயோனியன் தீவுகளில் அமைந்த முதல் பண்டைய கிரேக்க அரங்கம் கண்டறியப்பட்டுள்ளது.

- இந்த அரங்கம் ஆனது, கி.மு. 4 ஆம் நூற்றாண்டில், பண்டைய லெஃப்கடா செழித்து வளர்ந்த காலத்தில் கட்டப் பட்டிருக்கலாம்.
- இது சுமார் 3,500 பார்வையாளர்கள் அமரக் கூடியது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★